# வடக்கில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நாளையதினம் அடையாள வேலை நிறுத்தம்!

## அவசர சிகிச்சைகள் மட்டுமே இடம்பெறுமாம்

வட மாகாணத்தில் உள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் நாளை வெள்ளிக்கிழமை (03) காலை 8 மணியிலிருந்து சனிக்கிழமை (04)காலை 8 மணி வரை அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இன்று முதல் மாகாண ரீதியாக அடையாள வேலை நிறுத்த தொழிற்சங்கப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளது. இதன் ஓர் அங்கமாகவே வட மாகாணத்தில் நாளை போராட்டம் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் இவ் விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த செய்தி குறிப்பில், நாங்கள் பல மாதங்களாக வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேற இருப்பதையும் அது தொடர்பாக ஏற்படக்கூடிய பிரச்சனைகளையும் அதைத் தடுப்பதற்குரிய வழி வகைகளைப் பற்றியும் ஆட்சியாளர்களுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் தெளிவுபடுத்தியிருந்தோம்.

இருப்பினும் இதுவரை எந்தவிதமான சாதகமான, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் உரிய தரப்பினால் மேற்கொள்ளப்படாத நிலையில் நாம் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

நாளை முன்னெடுக்கப்படவுள்ள இந்த ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தின்போது வட மாகாணத்தில் உள்ள அனைத்து அரச வைத்தியசாலைகளிலும் அவசர சிகிச்சைகள் தவிர்ந்த ஏனைய சிகிச்சைகள் இடம்பெற மாட்டாது. மகப்பேற்று மருத்துவ சேவைகள், சிறுவர் மருத்துவ சேவைகள், புற்றுநோய்ச் சிகிச்சைகள், சிறுநீரக செயலிழப்புக்கான சிகிச்சைகள் இடம்பெறும்.

அரசாங்கமானது எமது முன்மொழிவுகளினூடாக தற்சமயம் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க முன் வர வேண்டும். அவ்வாறு தீர்வை 2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir




சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 16 வியாழக்கிழமை 02.11.2023 கதிர் 105

# பொதுஜன பெரமுனாவினரை ஆட்டிப்படைக்கும் கர்மவினை

## போட்டுத் தாக்குகின்றார் விமல்



“நாமல் ராஜபக்ச உள்ளிட்ட மொட்டுக் கட்சியினர் கர்மவினையை அனுபவித்து வருகின்றனர். கூட்டணிக் கலாசாரம் பற்றி தற்போது கதைக்கும் அவர்கள் கோட்டாபய ராஜபக்ச ஆட்சியில் அதனை மறந்தே செயற்பட்டனர்” - என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

“கூட்டணியாகச் செயற்படும்போது பங்காளிக் கட்சிகளினதும் ஆலோசனையைப் பெற்று, 2 ➤

# பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் வேலைநிறுத்தம்




யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களால் இன்று வேலைநிறுத்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் பல்கலைக்கழக முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

நாடு தழுவிய ரீதியில் 17 அரச பல்கலைக்கழகங்களிலும் இன்று அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அந்தவகையில் யாழ். பல்கலைக்கழகத்திலும் வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேலும் மதியம் 12 மணியளவில் யாழ். பல்கலைக்கழக முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

சம்பளப் பிரச்சினைகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் நிதியில் உள்ள குறைவு போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்து இந்த வேலைநிறுத்த போராட்டம் 2 ➤

# மைத்திரி உட்பட நால்வருக்கு நீதிமன்றம் அதிரடி உத்தரவு



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் நிலந்த ஜயவர்தன ஆகியோர் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை சத்தியக் கடதாசிகள் ஊடாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றம் இன்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பான வழக்கில் உத்தரவிடப்பட்ட நட்டஈட்டை முழுமையாக வழங்க இவர்கள் நால்வரும் தவறியுள்ளனர்.

இந்நிலையிலேயே சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை சத்தியக் கடதாசிகள் ஊடாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (அ)

# நிர்மலா சீதாராமன் கலந்துகொள்ளும் நிகழ்வுக்கு என்னை அழைக்காதது வேதனையளிக்கிறது!

## மனோ கணேசன் எம்.பி. ஆதங்கம்



இந்திய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்துகொள்ளும் “நாம் 200” என்ற விழாவுக்கு என்னை அழைக்காதது வேதனையளிக்கின்றது என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், எனது மாவட்டம் தலைநகர் கொழும்பில் நடைபெறும், “நாம்-200” என்ற விழா சிறப்புற வாழ்த்துகிறேன். எனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்பதால் விழாவில் கலந்துகொள்ள முடியாமைக்கு வருந்துகிறேன்.

இன்று நண்பகல், இதுபற்றி அறிந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, என்னுடன் 2 ➤

# சித்தன்கேணியில் புகைக்கூண்டின் வழியாகப் புகுந்து திருடர் கைவரிசை!

வீட்டின் புகைக் கூண்டின் ஊடாக உட்புகுந்த திருட்டு கும்பல் வீட்டில் இருந்த 6 பவுண் நகை மற்றும் 30 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளது.

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியான சித்தன்கேணி பகுதியில் உள்ள வீடொன்றில் இன்றைய தினம் வியாழக்கிழமை அதிகாலை புகுந்த 2 ➤

# காஸாவில் சிக்கிய இலங்கையர் அங்கிருந்து வெளியேறினராம்!

காஸா பகுதியில் சிக்கியிருந்த இலங்கையைச் சேர்ந்த 17 பேர், ரஃபா கேட் ஊடாக எகிப்திற்குள்நுழைய அனுமதிக்கப்பட்டுள்ளனர், என இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பேச்சாளர் காமினி செனரத் யாப்பா தெரிவித்துள்ளார்.

இன்று காலை இடம்பெற்ற விசேட ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே 2 ➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்ல துப்புரவுப் பணிகள் இன்று ஆரம்பமாயின



கார்த்திகை 27 மாவீரர் நினைவு நாளை முன்னிட்டு இன்றைய தினம் மல்லாவிப் பகுதியில் அமைந்துள்ள வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்ல துப்புரவு பணிகள் துயிலும் இல்ல நிர்வாகத்தினரால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

துப்புரவுப் பணியின் ஆரம்ப நாளான இன்றைய தினம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனும் சென்றிருந்தார்.

தொடர்ந்தும் கட்டம் கட்டமாக மாவீரர் துயிலும் இல்ல துப்புரவுப் பணிகள் நடைபெறும்.

**கவர்ஸ் கோப்ரேட் விவகாரம்:**

# நாமல் உட்பட அனைவரையும் விடுவிக்க நீதிமன்று உத்தரவு



கவர்ஸ் கோப்ரேட் நிறுவனத்துடன் தொடர்பான வழக்கிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உட்பட அனைத்து பிரதிவாதிகளையும் விடுதலை செய்ய கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரசு தரப்பு சாட்சியங்கள் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ள முடியாதவை எனச் சுட்டிக்காட்டிய கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க இன்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

# இரத்தக் காயங்களுடன் பெண் ஒருவரின் சடலம்

இரத்தக் காயங்களுடன் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சூரியவெவ வைத்தியசாலையில் நேற்று இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று சூரியவெவ பொலிஸார் இன்று ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர்.

சூரியவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார்.

சடலத்தைப் பரிசோதித்த போது வலது முழங்கையில் காயம் ஏற்பட்டு வலது காதில் இரத்தம் கசிந்துள்ளது என்றும், இது சந்தேகத்துக்குரிய மரணம் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சூரியவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

விசேட குழுவை, இந்திய வம்சாவளி மலையக மக்கள் தொடர்பில் அமைத்தமை தொடர்பில் அதிகாரபூர்வமாக அறிவிப்பதாகவும், அக்குழுவில் பங்கு பெற்று உங்கள் யோசனைகளை முன்வையுங்கள், என ஜனாதிபதி விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். உங்கள் அரசாங்கம் மக்கள் தொடர்பில் செய்யும் நல்ல காரியங்களை நாம் எப்போதும் வரவேற்போம், என பதிலளித்தேன்.

தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர், கொழும்பு மாவட்ட எம்.பி. என்ற முறைகளில் எனக்கு அழைப்புகள் தரப்படாவிட்டாலும்கூட, இந்நிகழ்வுக்கு அழைக்கப்பட்ட இந்திய, தமிழக அரசியல் தலைவர்களை "வருக, வருக" என இலங்கை நாட்டுக்கும் தலைநகர் கொழும்புக்கும் வரவேற்கிறேன், என்று மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

## வடக்கில் அரச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கி வைத்தியர்களை நாட்டில் தக்க வைத்து இலவச சுகாதார சேவையைப் பேணுவதற்குத் தவறும் பட்சத்தில், அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் ஆகிய நாங்கள் நமது போராட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டி ஏற்படும் - என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. (01)

## பொதுஜன பெரமுனாவினரை........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கமைய செயற்படுமாறு ஜனாதிபதிக்கு நாமல் ராஜபக்ச அறிவுரை வழங்கியுள்ளார். ஆனால், கோட்டாபய ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் கூட்டணி அரசியல் கலாசாரம் பற்றி அவர்களுக்குத் தெரிந்திருந்தால் அந்த ஆட்சிதான் இன்றும் நீடித்திருக்கும். நாமலின் கருத்தைக் கேட்கும்போது சிரிப்புத்தான் வந்தது. அதுதான் கர்மவினை.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலை எப்படியாவது ஒத்திவைத்து ஆட்சியைத் தக்கவைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கின்றார். அதற்காக சலுகை அறிவிப்புகள் வெளி வருகின்றனர். இப்படியான தற்காலிக நடவடிக்கைகளால்தான் நாடு நாசமானது. எனவே, புதிய அரசியல் பயணத்துக்கு மக்கள் தயாராக வேண்டும்." - என்றார். (அ)

## பல்கலைக்கழக கல்விசாரா........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்பட்டது.

நேற்று நாவலவிலுள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக வளாகத்தில் அரச சேவை தொழிற்சங்கக் கூட்டமைப்பு மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் என்பன இணைந்து நடத்திய கூட்டத்தின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## நிர்மலா சீதாராமன்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொலைபேசியில் தொடர்புகொண்டு, நான் என் கையெழுத்தில், உடனடியாக அழைப்புக் கடிதம் அனுப்புகிறேன் - கலந்துகொள்ளுங்கள், என்று கூறினார்.

உங்கள் அரசாங்க கட்சிகள் விழாவாக இது நடக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை நன்கு விளங்குகின்றது. ஆகவே, அங்கே வந்து அதில் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்பட நான் காரணமாக இருக்க விரும்பவில்லை. ஆகவே நான் கலந்துக்கொள்ளவில்லை, என ஜனாதிபதியின் கருத்தை நாகரீகமாக நான் மறுத்துவிட்டேன்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் ஒரு

## காஸாவில் சிக்கிய ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், குறித்த குழுவைச் சேர்ந்த சுமார் 15 பேர் இன்று மதியம் 12 மணிக்குள் எகிப்தை அடைய உள்ளனர். இதற்குத் தேவையான பணிகளை எகிப்து தூதரகமும் பாலஸ்தீனத்திலுள்ள பிரதிநிதி அலுவலகமும் செய்து வருகின்றன.

அதன்படி அவர்கள் பத்திரமாக எகிப்தை அடையப் போகிறார்கள், என காமினி செனரத் யாப்பா தெரிவித்தார்.

இதேவேளை, காணாமல் போன இலங்கையர் ஒருவர் ஹமாஸ் அமைப்பினரால் பிடிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது எனவும், அவரை மீட்பதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (04)

## சித்தன்கேணியில் புகைக்கூண்டின்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும்பலே திருட்டில் ஈடுபட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதன்போது, திருட்டு கும்பல் வீட்டின் புகைக்கூட்டின் ஊடாகவே வீட்டினுள் நுழைந்து திருட்டில் ஈடுபட்டு உள்ளதாகவும், தடயங்களின் அடிப்படையில் வீட்டினுள் இருவர் நுழைந்து இருக்கலாம், வேறு சிலர் வீட்டின் வெளியே பாதுகாப்புக்கு நின்று இருக்கலாம் என சந்தேகிக்கப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். (01)




உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

# ‘சித்திர முத்திரைகள்’ ஓவிய, கைவினைப் பொருள் கண்காட்சி யாழ்ப்பாணத்தில்

(எமில்)

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் ‘ சித்திர முத்திரைகள்’ என்னும் ஓவிய,கைவினைப் பொருட்களின் கண்காட்சி நாளை 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இல.128, டேவிற் வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது அழகியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கலைத்தூது அழகியல்கல்லூரியில் சித்திரப் பாடத்தையும் ஏனைய நுண்கலைப் பாடங்களையும் பயில்கின்ற மாணவர்களது ஆற்றல்களை வெளிக்கொணரும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டு கடந்த பல வருடங்களாக நடத்தப்பட்டு வருகின்ற இக்கண்காட்சியில், அயல் பாடசாலைகளில் சித்திர பாடத்தைப் பயில்கின்ற மாணவர்களது ஓவிய, கைவினைப் பொருட்களும் இணைத்துக் கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

‘சித்திர முத்திரைகள்’ கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறும். இதன்போது பிரபல ஓவியரும் தென்மராட்சி கல்வி வலய அழகியல் பாட ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான கோ.கைலாசநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இக்கண்காட்சிக்கான அனுசரணையை திருமறைக் கலாமன்றத்தின் மூத்த அங்கத்தவர் கலாபூஷணம் அமரர் அ.யோசேப் அவர்களின் குடும்பத்தினர் வழங்குகின்றனர்.

# இராணுவ மேஜர் ஜெனரலின் வாகனம் மோதி ஒருவர் சாவு!

மோட்டார் வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி மரக்கறி கடை ஒன்றில் மோதிய விபத்தில் அங்கு பணிபுரிந்த நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மாவனல்லை ஹிங்குல பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

அந்த வாகனத்தை ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் ஜெனரல் ஒருவரே செலுத்தியுள்ளார் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.


சம்பவத்தில் படுகாயமடைந்த நபர், மாவனல்லை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார். இவர் மாவனல்லை, ஹிங்குல பிரதேசத்தில் வசிக்கும் 34 வயதுடைய திருமணமானவர்.

அந்த மோட்டார் வாகனம் கொழும்பிலிருந்து கண்டி நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது சாரதியால் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் வீதியை விட்டு விலகி காய்கறி கடையை மோதி பலத்த சேதத்தை விளைவித்ததுடன் அருகிலிருந்த தொலைபேசிக் கம்பத்திலும் மோதியது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் மாவனல்லை ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

வாகனத்தைச் செலுத்திய மத்தேகொட பிரதேசத்தைச் சேர்ந்த 62 வயதுடைய ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் ஜெனரலைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# முதலில் நாடாளுமன்றத் தேர்தல்! ரணிலிடம் ‘மொட்டு’ யோசனை




ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கான யோசனையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆலோசனை நடத்தியுள்ளது.

இது தொடர்பில் கட்சிக்குள் பலகட்டப் பேச்சுக்கள் கடந்த சில நாள்களாக இடம்பெற்று வருகின்றன என்று அறிய முடிகின்றது.

நாட்டின் அபிப்பிராயத்தைத் துல்லியமாகப் பரிசோதிக்கப் பொதுத் தேர்தலைப் பயன்படுத்த முடியும் எனவும், அதன் பெறுபேற்றின் அடிப்படையில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் முடிவெடுக்க வேண்டும் எனவும் பொதுஜன பெரமுனவினர் ஆலோசித்துள்ளனர்.

இந்தக் கலந்துரையாடல்களில் எதிர்வரும் வரவு - செலவுத் திட்டம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

வரவு - செலவுத் திட்டத்தைத் தோற்கடிப்பதற்கான எந்தத் தீர்மானமும் இதுவரை எடுக்கப்படவில்லை.

அமைச்சரவை மறுசீரமைப்பின் பின்னர் பொதுஜன பெரமுனவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் சில முறுகல்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் வரவு - செலவுத் திட்டத்தில் சில அமைச்சுகள் மீதான ஒதுக்கீடுகளை தோற்கடிக்கும் நோக்கில் பொதுஜன பெரமுனவுக்குள் குழுவொன்று செயற்பட்டு வருகின்றது என அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தமையும் குறிப்பித்தக்கது. (அ)

# யாழ் பல்கலை மாவீரர் நினைவுத்தூபியில் மாணவர்களால் ஈகைச் சுடர் ஏற்றப்பட்டது





யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மாவீரர் நினைவுத்தூபி துப்புரவு செய்யப்பட்டு ஈகைச் சுடர் ஏற்றப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மாவீரர் நினைவுத்தூபியை துப்பரவு செய்யும் பணிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இன்றைய தினம் ஈடுபட்டனர். அதன்பின் தூபியில் ஈகைச்சுடர் ஏற்றி மாணவர்கள் மரியாதை செலுத்தினர். (01)

# லங்கா சதொச நிறுவனத்தின் பால்மா விலை குறைந்தது!




தமது நிறுவனத்தின் தயாரிப்பில் விநியோகிக்கப்படும் 400 கிராம் பால்மா பொதிகளின் விலையை லங்கா சதொச நிறுவனம் குறைத்துள்ளது.

அதன்படி 400 கிராம் பால்மாவின் விலை 22 ரூபாவால் குறைக்கப்பட்டு புதியவிலை 948 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக லங்கா சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியில் உள்ள பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, லங்கா சதொச வாடிக்கையாளர்கள் நாடு முழுவதிலும் உள்ள விற்பனை நிலையங்களில் இருந்து குறைந்த விலையில் பால்மாவை கொள்வனவு செய்ய முடியும்.

லங்கா சதொச விற்பனை நிலையங்களில் தற்போது அதிகளவான உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்கள் சலுகை விலையில் விற்பனை செய்யப்படுவதாகவும் அந்நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (04)

# இலங்கையில் எச்.ஐ.வி தொற்றாளர்கள் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிப்பு!



இந்த ஆண்டின்முதல் காலாண்டில் இலங்கையில் மொத்தம் 485 பேர் எச்.ஐ.வி தொற்று அல்லது எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ள அதேநேரம் 43 இறப்புகளும் பதிவாகியுள்ளன என்று தேசிய பாலியல் நோய் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்டத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஜானகி விதானபத்திரன தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டினை விட இந்த வருடம் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எச்.ஐ.வி தொற்று 15-49 வயதிற்கு இடையிலானவர்கள் மத்தியிலேயே அதிகளவில் காணப்படுகிறது, எனவும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில், நாடு முழுவதும் உள்ள 41 நிலையங்களில் இலவசமாக எச்.ஐ.வி பரிசோதனை மேற்கொள்ள முடியும் என பொதுமக்களுக்கு தேசிய எயிட்ஸ் தடுப்பு திட்டம் அறிவித்துள்ளது.

இதற்காக www.know4sure.lk என்ற இணையத்தின் ஊடாக முன்பதிவு செய்துகொள்ள முடியும் என்றும் மேலதிக தகவல்களுக்கு 0112 667 163, 0703 633 533 இலக்கத்தைத் தொடர்புகொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் எச்.ஐ.வி தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ள போதிலும், புதிய நோயாளர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகின்றது.

இலங்கையில் தற்போது 5,496 பேர் எச்.ஐ.வி. தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் அவர்களில் 4,095 பேர் ஆண்கள், 1,391 பேர் பெண்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (04)

# இஸ்ரேலுடனான அரசு முறை உறவை துண்டிப்பதாக பொலிவியா அறிவிப்பு



காஸா மீதான தொடர் தாக்குதல் காரணமாக இஸ்ரேலுடனான அரசு முறை உறவைத் துண்டித்துக்கொள்வதாக தென்னமெரிக்க நாடான பொலிவியா அறிவித்துள்ளது.

இஸ்ரேலின் ராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் நியாயமற்ற ராணுவ நடவடிக்கைகள் காரணமாக இந்த முடிவை எடுப்பதாக பொலிவியா தெரிவித்துள்ளது.

பாலஸ்தீன ஆதரவு பெற்ற காஸாவின் ஹமாஸ் படையினருக்கும் இஸ்ரேல் ராணுவத்துக்கும் மூன்று வாரங்களுக்கும் மேலாக போர் நீடித்து வருகிறது.

ஒக்டோபர் 7ஆம் திகதி காஸா தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, போரை அறிவித்த இஸ்ரேல், இரண்டாவது கட்டமாக காஸாவுக்குள் புகுந்து தரைவழித் தாக்குதலையும் நடத்தி வருகிறது. இந்தத் தாக்குதலில் காஸாவில் மட்டும் 8,300க்கும் அதிகமானோர் பலியாகியுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. இதில், பாதிக்கும் மேற்பட்டோர் குழந்தைகள் - பெண்கள் - முதியவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், இஸ்ரேலின் ராணுவ நடவடிக்கை காரணமாக அந்நாட்டுடனான உறவை பொலிவியா அரசு துண்டித்துள்ளது. காஸாவின் ராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் நியாயமற்ற ராணுவ நடவடிக்கைகள் காரணமாக இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக பொலிவியா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், காஸா மீதான தாக்குதலை நிறுத்த வேண்டும் என்றும் போர் நிறுத்தம் அறிவிக்கும்வரை இஸ்ரேலுடன் எந்த உறவும் இருக்காது, எனவும் அந்த நாடு குறிப்பிட்டுள்ளது.

காஸா மீதான தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து கொலம்பியா, சிலி ஆகிய நாடுகளும் இஸ்ரேல் நாட்டுக்கான தங்கள் தூதர்களை திரும்ப அழைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

# காஸா பகுதியிலிருந்து பொதுமக்கள் வெளியேற முதல்முறையாக நேற்று அனுமதி வழங்கப்பட்டது



இஸ்ரேலால் முற்றுகையிடப்பட்டு, கடுமையான தாக்குதலுக்குள்ளாகி வரும் காஸா பகுதியிலிருந்து பொதுமக்கள் வெளியேற முதல்முறையாக நேற்று அனுமதி வழங்கப்பட்டது.

வெளிநாட்டினர், காயமடைந்தோர் ஆகியோர் மட்டும் காஸாவிலிருந்து எகிப்துக்குச் செல்ல குறிப்பிட்ட கால அளவில் இந்த அனுமதி அளிக்கப்படும் என்று கூறப்பட்டது.

இது குறித்து எகிப்து மற்றும் காஸா பிராந்திய அதிகாரிகள் தகவல் வழங்கும்போது, காஸாவில் சிக்கியுள்ள வெளிநாட்டினரும், காயமடைந்துள்ள பாலஸ்தீனர்களும் ராஃபா நகர எல்லை வழியாக எகிப்துக்குள் புதன்கிழமை அனுமதிக்கப்பட்டனர்.

வெளிநாட்டுக் கடவுச்சீட்டுகளை வைத்துள்ள 320 பேர் ராஃபா எல்லை வழியாக எகிப்துக்குள் அனுமதிக்கப்பட்டனர். அவர்களைத் தவிர, காயமடைந்துள்ள மேலும் 76 பேர் எகிப்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவதற்காக அவசரகால ஊர்திகள் மூலம் அந்த நாட்டுக்குள் அழைத்துவரப்பட்டனர், என்று தெரிவித்தனர்.

முதல் கட்டமாக வெளிநாட்டினர் மற்றும் இரட்டைக் குடியுரிமை வைத்துள்ள 500 பேரை எகிப்துக்குள் அனுமதிக்க ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வெளியேற்றம் இன்னும் சில நாட்களுக்குத் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஹமாஸ் அமைப்பினரை முழுமையாக அழிக்கும் நோக்கில் காஸா மீது இஸ்ரேல் ராணுவம் கடந்த 26 நாட்களாக தீவிர குண்டுவீச்சு நடத்தி வருகிறது. இதில் ஏராளமான வெளிநாட்டினரும் உயிரிழந்து வருவதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சூழலில், காஸாவில் சிக்கியுள்ள வெளிநாட்டினரைப் பாதுகாப்பாக வெளியேற்றுவது குறித்து சர்வதேச அளவில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. அதன் பலனாக, வெளிநாட்டினர் மற்றும் காயமடைந்தவர்கள் எகிப்துக்குள் தற்போது முதல்முறையாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (04)

# பன்றி இதயம் பொருத்தப்பட்டவர் 40 நாட்களே தாக்குப்பிடித்தாராம்!



நவீன மருத்துவ அறிவியல் வியக்கத்தக்க அளவில் முன்னேறி வருகிறது. மனிதர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களுக்குத் தீர்வளிக்க பரிசோதனைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், அப்படியான பரிசோதனை முயற்சி ஒன்றினால் வெற்றிகரமாக தனது இறப்பைத் தள்ளி வைத்த மனிதரின் அதிர்ஷ்டம் 40 நாள்களுக்கு மேல் நீடிக்கவில்லை.

அமெரிக்காவின் மேரிலாண்ட் மருத்துவ கல்லூரியின் மருத்துவர்கள் குழு, கடந்த செப்டெம்பர் 20 ஆம் தேதி 58 வயதான லாரன்ஸ் பேஸட் என்பவருக்கு மரபணு மாற்றப்பட்ட பன்றியின் இதயத்தை வெற்றிகரமாகப் பொருத்தினர்.

முன்னாள் கடற்படை வீரரான இவரின் இதயம் செயலிழந்த நிலையில் இந்த சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. 6 வாரங்கள் பிழைத்த லாரன்ஸ், கடந்த திங்கட்கிழமை (ஒக்.30) அன்று உயிரிழந்துள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சத்திர சிகிச்சைக்குப் பிறகு உடற்பயிற்சிகள் மேற்கொள்வது, குடும்பத்தோடு நேரம் செலவழிப்பது, சீட்டுக்கட்டு விளையாடுவது என குறிப்பிடத்தக்க அளவில் லாரன்ஸ் முன்னேறி வந்தார்.

ஆரம்ப நாட்களில் அவர் உடல், மறுப்பிற்கான அறிகுறிகளைக் காட்டினாலும் இது வழக்கமான இதய மாற்று சத்திர சிகிச்சையிலும் நடக்கக் கூடியதுதான். மருத்துவர்களின் முயற்சியால் அவர் ஒக்டோபர் 30 வரை பிழைத்திருந்தார், என மேரிலாண்ட் மருத்துவக் கல்லூரியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விலங்குகளின் உறுப்புகளை மனிதர்களுக்குப் பொருத்தும் சிகிச்சைக்கு ஜீனோ உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை என்று பெயர். இந்த சத்திர சிகிச்சை முறை, மிகுந்த சவால் நிறைந்தது.

உறுப்பு மாற்று சத்திர சிகிச்சைகள் இன்று பெருமளவில் நடைபெற்று வந்தாலும் மனித உறுப்புகள் எளிதில் கிடைக்கக் கூடியன அல்ல. இந்த நிலையில், விலங்குகளின் உறுப்புகளை மனிதர்களுக்கு ஏற்றாற்போல மரபணு மாற்றம் செய்யப்பட்டு பொருத்தும் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

மேரிலாண்ட் மருத்துவமனை மேற்கொள்ளும், பன்றியின் இதயத்தை மனிதர்களுக்கு பொருத்தும் இரண்டாவது சத்திர சிகிச்சை இது.

முதல் சத்திர சிகிச்சை, 2022 ஜனவரி 7 இல் டேவிட் பெனட் என்பவருக்கு மேற்கொள்ளப்பட்டது. அவர் இரண்டு மாதங்கள் வரை உயிருடன் இருந்தார்.

இன்னும் இந்த ஆராய்ச்சியில் நீண்ட கால நோக்கில் மேம்பட்ட முடிவுகள் கிடைக்கப் பெறலாம் என நம்பப்படுகிறது. (04)

# தென்கிழக்காசியப் பிராந்திய அமைப்பின் அடுத்த இயக்குநராக சைமா வாஸித் தெரிவு

உலக சுகாதார அமைப்பின் கீழ்செயல்படும் தென்கிழக்காசியப் பிராந்திய அமைப்பின் அடுத்த இயக்குநராக பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவின் மகளும் மனநல மருத்துவ நிபுணருமான சைமா வாஸித் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

பிராந்தியத்தின் அடுத்த இயக்குநர் பதவிக்கான போட்டியில் சைமா வாஸித்துக்கும், நேபாளத்தைச் சேர்ந்த உலக சுகாதார அமைப்பின் மூத்த அதிகாரி ஷம்பு பிரசாத் ஆச்சார்யாவுக்கும் இடையே போட்டி நிலவி வந்தது.

இந்நிலையில், டில்லியில் நடைபெற்று வரும் பிராந்திய அமைப்பின் 76 ஆவது கூட்டத்தில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் சைமா வாஸித் தேர்வு செய்யப்பட்டிருப்பதாக உலக சுகாதார நிறுவனம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா உட்பட 10 நாடுகள் பங்கேற்ற ரகசிய வாக்கெடுப்பில் வாஸித்துக்கு 8 வாக்குகளும் ஆச்சார்யாவுக்கு 2 வாக்குகளும் கிடைத்துள்ளன.

சுஸ்விட்சர்லாந்தின் ஜெனீவாவில் அடுத்த ஆண்டு ஜனவரியில் நடைபெறும் உலக சுகாதார அமைப்பின் நிர்வாகச் சபைக் கூட்டத்தில் இந்தப் பரிந்துரை சமர்ப்பிக்கப்படும். இதைத் தொடர்ந்து, பெப்ரவரி மாதம் முதலாம் திகதி பிராந்திய இயக்குநராகப் பதவியேற்கும் சைமா வாஸித், அடுத்த 4 ஆண்டுகளுக்கு அந்தப் பதவியை வகிப்பார்.

பிராந்திய அமைப்பின் அடுத்த இயக்குராகத் தன்னைத் தெரிவு செய்த உறுப்பு நாடுகளுக்கு சைமா வாஸித் டுவிட்டர் சமூகவலைதளத்தில் நன்றி தெரிவித்துள்ளார்.

முன்னதாக, வாஸித்துக்கு ஆதரவு தெரிவித்து பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சகம் அந்நாட்டின் சுகாதாரத் துறை அமைச்சகத்துடன் இணைந்து வாக்கெடுப்பின் தொடக்கத்திலிருந்து பிரசாரத்தில் ஈடுபட்டது.

பெரும் ஆதரவுடன் வாஸித் பெற்ற வெற்றி, பொதுச் சுகாதாரத்தில் அவர் கொண்டுள்ள அர்ப்பணிப்பு, அயராத பணி ஆகியவற்றைப் பிரதிபலிப்பதாகவும், அவரது தலைமை தாங்கும் திறன் மீது பிராந்திய உறுப்பு நாடுகள் கொண்டுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது, என அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உலக சுகாதார அமைப்பின் 6 பிராந்திய அமைப்புகளில் ஒன்றான தென்கிழக்காசிய பிராந்திய அமைப்பு டில்லியைத் தலைமையிடமாகக் கொண்டது. இதில் பங்களாதேஷ், பூட்டான், வடகொரியா, இந்தியா, இந்தோனேசியா, மாலைதீவுகள், இலங்கை, நேபாளம், தாய்லாந்து, தைமூர் லெஸ்தே ஆகிய 11 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. (04)

# இந்தியாவில் 7.4 கோடி தொன் உணவு ஆண்டுதோறும் வீணடிக்கப்படுகிறது

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 7.4 கோடி தொன் உணவு வீணடிக்கப்படுகிறது. இது, 2022-23-ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த உணவு தானிய உற்பத்தியில் 22 வீதம் என்பது குறிப்பிடத்தக்கது. உலக உணவு தானிய உற்பத்தியில் 8 வீதம் அதாவது 93.1 கோடி தொன் உணவு வீணாவதாக இந்திய வேளாண் ஆராய்ச்சி மையத்தின் (ஐசிஏஆர்) புள்ளிவிவரங் கள் தெரிவிக்கின்றன. தெற்காசியப் பிராந்தியத்தில் உணவு இழப்பை தடுப்பது தொடர்பாக நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கில் இந்த தகவல் பகிர்ந்து கொள்ளப்பட்டது.

அறுவடைக்குப் பிந்தைய இழப்பு மற்றும் உணவு கழிவுகள் என்பது நாடுகளின் புவியியல் தன்மையின் அடிப்படையில் வேறுபடுகின்றன. இது பெரும் பாலும், பயிர்கள், பொருட்கள், சேமிப்பு காலம், கால நிலை, தொழில்நுட்ப தலையீடுகள், மனிதர்களின் பழக்கவழக்கம் மற்றும் மரபு ஆகியவற்றை சார்ந்தவை யாக உள்ளன. ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டத்தின் (யுஎன்இபி) உணவு கழிவு குறியீட்டு அறிக்கை 2021 இன்படி, உலகளவில் உணவுகள் கழிவுகளாக வீணடிக்கப்படுவதற்கு குடும்பங்கள், உணவு சேவைகள், சில்லறை விற்பனை நிலையங்கள் காரணங்களாக உள்ளன. (04)

# கல்முனைக் கல்வி வலயத்தில் மாணவ நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாநாடு



(நூருல் ஹுதா உமர்)

நாட்டின் ஜனநாயகம், நல்லாட்சி, நாடாளுமன்ற நடைமுறைகள், சட்டவாக்கம், தலைமைத்துவம் தொடர்பில் கல்முனை கல்வி வலய பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவ நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான மாநாடு அல் - மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் அனுசரணையுடன் கல்முனை வலயக்கல்வி அலுவலக ஏற்பாட்டில் சாய்ந்தமருதில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினரும், அல்- மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் தவிசாளருமான யூ.எல்.என். /ஹுதா உமரின் ஆரம்ப உரையுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில், கல்முனை வலயக்கல்வி அலுவலக பிரதிக்கல்வி பணிப்பாளர் எம்.எச். ஜாபீர் தலைமையுரை நிகழ்த்தினார். பிரதான வளவாளராக இலங்கையின் முதலாவது முஸ்லிம் அரசியல்துறை பேராசிரியரும் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலைக்கலாசார பீடத்தின் பீடாதிபதியுமான பேராசிரியர் எம்.எம்.பாஸில் கலந்து கொண்டு நாட்டின் ஜனநாயகம், நல்லாட்சி, நாடாளுமன்ற நடைமுறைகள், நாடாளுமன்ற சட்டவாக்கம், தலைமைத்துவம் தொடர்பில் விரிவுரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினரும் உள்ளூராட்சி மாகாண சபைகள் முன்னாள் இராஜாங்க அமைச்சரும் ஸ்ரீ.ல.மு.கா. பிரதித்தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் பிரதம அதிதியாகவும், வளவாளராகவும் கலந்துகொண்டு நாடாளுமன்ற நடைமுறைகள், சர்வதேச, தேசிய அரசியல் நடவடிக்கைகள், ஜனநாயகத்தின் பல்வேறு முகங்கள் தொடர்பில் தகவல்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக கல்முனை வலயக்கல்வி அலுவலக பிரதிக்கல்வி பணிப்பாளர்கள், உதவிக்கல்வி பணிப்பாளர்கள், கணக்காளர் வை. ஹபிபுல்லாஹ், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியும் கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்திய அதிகாரியுமான டொக்டர் எம்.ஜே.கே.எம். அர்ஷத் காரியப்பர், கிழக்கு மாகாண அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளன செயற்குழு உறுப்பினரும் கிழக்கின் கேடயம் பிரதானியுமான எஸ்.எம். சபீஸ், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், சாய்ந்தமருது, கல்முனை கல்வி கோட்டங்களை சேர்ந்த மாணவ நாடாளுமன்ற உறுப்பினர்கள், முக்கிய பிரமுகர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## மகாஜனக்கல்லூரி மாணவர்கள் தேசிய மட்டத்தில் பிரகாசிப்பு




(அஸ்ஹர் இப்றாஹிம்)

தேசியமட்ட தமிழ் மொழித்தினப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மாணவர்கள் தங்கப் பதக்கம் வென்றுள்ளனர்.

கல்வியமைச்சு அகில இலங்கை ரீதியில் ஒழுங்குசெய்திருந்த தேசியமட்ட தமிழ் மொழித்தினப் போட்டியில் பிரிவு 1 (போட்டி இல 15, தரம் 6,7,8 ) தமிழறிவு குறுவினா எழுத்துப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மாணவர்கள் தங்கப்பதக்கம் வென்றுள்ளனர்.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் பயிற்றுவித்த தமிழ்த்துறை ஆசிரியர்களுக்கும் , பொறுப்பாசிரியை திருமதி.பத்மலோஜினி சிவசிவா அவர்களுக்கும் கல்லூரி அதிபர் உள்ளிட்ட கல்விச் சமூகம் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளது.

## அம்பாறை மாவட்டத்தின் இலக்கிய சாகித்திய விழா



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கலாசார அலுவல்கள் திணைக்களமும், அம்பாறை மாவட்ட செயலகமும் இணைந்து ஒழுங்கு செய்திருந்த இவ்வருடத்திற்கான இலக்கிய சாகித்திய விழா அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம தலைமையில் மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மாவட்ட ரீதியில் கவியரங்கம், நாட்டுப்புறப் பாடல், பாடல், நாடகம் மற்றும் பாடல் எழுதுதல் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களின் கலாசார விழுமியங்களைச் சித்தரிக்கும் பல நிகழ்வுகள் இங்கு மேடையேற்றப்பட்டன. இந்நிகழ்வில் மாவட்டச் செயலக உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், கவிஞர்கள், பாடகர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவு காணி உறுதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வு




கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள இதுவரையில் கனி உரிமைப் பத்திரம் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கான காணி உரிமைப் பத்திரம் வழங்கும் நிகழ்வு இன்றைய தினம் 01.11.2023 கண்டாவலைப் பிரதேச செயலாத்தில்வைத்து கடத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களினால் கண்டாவலை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 135 பேருக்கு காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன இந்நிகழ்வு கண்டாவளை பிரதேச செயலாளர் பிருந்தாகரன் தலைமையில் நடைபெற்றது இந்நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தவனாதன் மற்றும் கிராம சேவையாளர்கள் பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர். (02)

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நூலக உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு



(எம்.ஏ.ஏ.அக்தார்)

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 27 வருடங்கள் பூர்த்தி தினத்தினை முன்னிட்டு நூலகத்தில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய உத்தியோகத்தர்கள் உப வேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கரால் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வு தென்கிழக்குப் பல்கலைக்கழகக் கேட்போர் மண்டபத்தில் இடம்பெற்றது. நூலகர் எம்.எம்.றிபாயுத்தீனுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் ஞாபகார்த்தச் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டன .

இந்நிகழ்வில் பதிவாளர், பீடாதிபதிகள், நிதியாளர், பராமரிப்பு பொறியியலாளர், சிரேஷ்ட உதவி நூலகர்கள் மற்றும் ஏனைய சக நூலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# திருகோணமலையில் பொதுச் சேவைகள் நிறுவன, ஊழியர் – விழிப்புணர்வு நிகழ்வு



(ஹஸ்பர்)

தூய்மையான பொதுச்சேவையில் அரச நிறுவனங்கள் மற்றும் அரச ஊழியர்களின் பங்கும் பொறுப்பும் என்பது பற்றிய விழிப்புணர்வு நிகழ்வானது நேற்று திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சியின் தலைமையில் நடைபெற்றது.

“நேர்மையான தேசத்தை நோக்கி” என்ற தொனிப்பொருளில் இவ்விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அரச உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை முடித்துக் கொண்டு வீடுகளுக்குச் செல்லும்போது, தாங்கள் செய்த பணிகளில் திருப்தியடைய வேண்டுமென மாவட்ட அரசாங்க அதிபர் இதன்போது தெரிவித்தார்.

இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான தேசிய செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துதல், புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டம், ஒரு பொது அதிகாரியின் வரையறை, ஒரு பொது அதிகாரியின் பொறுப்பு மற்றும் பொறுப்புணர்வைத் தவிர நேர்மை ஏன் தேவைப்படுகிறது என்பது குறித்தும் மாவட்ட அரசாங்க அதிபர் எடுத்துரைத்தார்.

மேலும், பொதுமக்களுக்குத் தூய்மையான மற்றும் தரமான சேவையை வழங்குவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், அதன் வளர்ச்சிக்காக ஒரு பொது நிறுவனத்தில் இலஞ்சம் மற்றும் ஊழலற்ற பொதுச் சேவைக்கு அரச அதிகாரிகளின் அணுகுமுறைகள் குறித்தும் தெளிவுபடுத்தினார்.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ். சுதாகரன், மாவட்டச் செயலக அதிகாரிகள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# அஸ்ரப் வித்தியாலயத்திற்கு கணிணிகள் அன்பளிப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

பேருவளையைச் சேர்ந்த ஆசிரியை மர்/ஹமா ஸீனத் நயிமா அமீன் அவர்களின் ஞாபகார்த்தமாக அவரின் புதல்வர் பிராஸினால் சாய்ந்தமருது லீடர் எம். எச்.எம்.அஸ்ரப் வித்தியாலயத்திற்கு 5 கணிணிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இப்பாடசாலை மாணவர்கள் தகவல் தொழில்நுட்பப் பாடத்தினைக் கற்றுக்கொள்வதற்கு கணிணிகள் இல்லாத குறை நீண்டகாலமாக இருந்து வந்தது.

மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் கணிணிகளை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வு பாடசாலையில் விமர்சையாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர் எஸ்.எம்.சுஜான் உட்பட முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், பாடசாலை நலன் விரும்பிகள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வீதியைப் புனரமைத்துத் தருமாறு வேண்டி வீதியை மறித்து கவனவீர்ப்புப் போராட்டம்




வவுனியா, பண்டாரிக்குளம் பிரதான வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரி அப்பகுதி மக்களால் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

பல வருடங்களாக குறித்த வீதி எவ்வித புனரமைப்பும் இன்றி உள்ளதோடு, தற்போது குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் பாதையைப் பயன்படுத்துவதில் தாம் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுப்பதாக போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். உடனடியாக வீதியைச் செப்பனிட்டுத் தருமாறும் கோரினர்.

வவுனியா, பண்டாரிக்குளம் விபுலானந்த கல்லூரி முன்பாக ஆரம்பமான இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் பண்டாரிக்குளம் பிரதான வீதியூடாக ஊர்வலமாகச் சென்று ரயில் நிலைய பிரதான வீதியைச் சென்றடைந்தது. அங்கு சிறிது நேரம் வீதியை வழிமறித்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள், மூவாயிரம் மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலை அமைந்துள்ள பிரதான வீதியை உடனே புனரமைப்புச் செய், ஏமாற்றாதே ஏமாற்றாதே இனியும் ஏமாற்றாதே, மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரே பதில் சொல் – நிதி எங்கே?, வேண்டும் வேண்டும் நீதி வேண்டும், நான்கு கிராம சேவையாளர் பிரிவு மக்கள் துன்பப்படுவது உங்களுக்குத் தெரியவில்லையா?, போன்ற பல்வேறு வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்தனர். (அ)

# பாண்டிருப்பு மகா வித்தியாலயத்திற்கு ஒலிபெருக்கிச் சாதனங்கள் அன்பளிப்பு



(எம்.ஏ.ஏ.அக்தார்)

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட பாண்டிருப்பு மகா வித்தியாலயத்திற்கு பழைய மாணவர்களால் ஒலிபெருக்கி சாதனங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட பாண்டிருப்பு மகா வித்தியாலயத்தின் நீண்டநாள் தேவைகளுள் ஒன்றான ஒலிபெருக்கிச் சாதனங்களை, 1994 ஆம் ஆண்டு இப்பாடசாலையில் கல்வி கற்ற பழையமாணவர்கள் ஒன்றிணைந்து பாடசாலை நிர்வாகத்திடம் வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.11.2023இல் வெளியிடப்பெற்றது.